**நவம்பர் – 22**

# TNPSC துளிகள்

- TVS மோட்டார் நிறுவனத்தின் ஓய்வு பெற்ற தலைவர் வேணு ஸ்ரீனிவாசன், 2025 ஆம் ஆண்டிற்கான CII தர ரத்னா விருதைப் பெற்றுள்ளார்.
- கொல்கத்தாவின் அறிவியல் நகரத்தின் பருவநிலை மாற்ற கலைக் காட்சிக் கூடமான On The Edge, துபாயில் நடைபெற்ற 27வது ICOM பொது மாநாட்டில் CIMUSET விருதை வென்றது.
- கூகுள் நிறுவனமானது, உரை, படங்கள், ஒளி, ஒலி மற்றும் குறியீட்டை ஒன்றாக செயலாக்கக் கூடிய ஜெமினி 3.0 என்ற பல்மாதிரி செயற்கை நுண்ணறிவு மாதிரியை அறிமுகப் படுத்தியுள்ளது.
- கர்நாடகா மாநில அரசானது, KEOICS உடன் இணைந்து கட்டமைக்கப்பட்ட, டிஜிட்டல் கற்றலுக்கான கர்நாடக DSERT பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட செயற்கை நுண்ணறிவுக் கருவியான BUDDH பொருத்தப்பட்ட மலிவு விலையிலான செயற்கை நுண்ணறிவு நுட்பத்திற்குத் தயார் நிலையிலான KEO எனும் கணினியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியக் கடற்படையானது, INS மாஹே எனும் முதல் மாஹே ரக நீர்மூழ்கி எதிர்ப்பு போர்க் கப்பலின் சின்னத்தினை வெளியிட்டது என்பதோடு இதில் அந்த மாநிலத்தின் தற்காப்புக் கலை பாரம்பரியத்தைக் குறிக்கும் ஒரு பாரம்பரிய கேரள வாளான உருமி இடம் பெற்றுள்ளது.
  - இந்தக் கப்பலின் முழக்கம் ஆன "Silent Hunters" என்பது ரேடாருக்குப் புலப்படா அதன் திறனையும் விழிப்புணர்வையும் குறிக்கிறது.
- இந்திய அரசானது, அடிப்படை செயற்கை நுண்ணறிவை (AI) கற்பிப்பதற்கான YUVA AI for ALL என்ற ஓர் இலவச தேசியப் பாடத்திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
  - இது மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தினால் (MeitY) உருவாக்கப் பட்ட ஒரு சுய காலத் தேர்வு அடிப்படையிலான பாடத் திட்டமாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## பொது விநியோக திட்டத்தின் கீழ் மாதவிடாய் பயன்பாட்டுப் பொருட்கள்

- ரேஷன் கடைகள் மூலம் மாதவிடாய் காலப் பயன்பாட்டு துணிகளை வழங்குவது குறித்த பொது நல வழக்கிற்கு (PIL) பதிலளிக்குமாறு சென்னை உயர் நீதிமன்றம் தமிழக அரசைக் கோரியுள்ளது.
- இந்த பொதுநல வழக்கு, பொது விநியோக அமைப்பு (PDS) மூலம் இலவச அல்லது மானிய விலையில் மாதவிடாய் காலப் பயன்பாட்டுத் துணிகளை வழங்குவது பற்றியதாகும்.
- மாதவிடாய் கால வறுமை எனப்படும் பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக பல பெண்கள் தங்கள் மாதவிடாய் காலத்தில் சுகாதாரமற்ற பொருட்களைப் பயன்படுத்துவதாக அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.
- நியாய விலைக் கடைகள் மூலம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாதத்திற்கு குறைந்தது ஒரு முறை பயன்படுத்தி விட்டு தூக்கி எறியும் 25 மாதவிடாய் காலப் பயன்பாட்டு துணிகளை /சானிட்டரி பேட்களை வழங்க வேண்டும் என்று அது கோரியது.
- மாதவிடாய் காரணமாக அழுக்குத் துணிகள், காகிதம், திசுக்கள், கந்தல்கள் மற்றும்

இலைகளைப் பயன்படுத்துவது 'மாதவிடாய் வறுமை' என்று அழைக்கப் படுகிறது.




# தேசியச் செய்திகள்

## குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநரின் முடிவுகளுக்கான காலக்கெடு




- நவம்பர் 20 ஆம் தேதியன்று உச்ச நீதிமன்றம், மாநிலச் சட்டமன்றங்களால் நிறைவேற்றப் பட்ட மசோதாக்கள் குறித்து முடிவெடுக்க வேண்டிய சூழலில், அரசியலமைப்பு நீதிமன்றங்கள் ஆனது குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநர்களுக்கான காலக்கெடுவை பரிந்துரைக்க முடியாது என்றும், "ஒப்புதலாக கருதப் படும் உத்தரவை" உச்ச நீதிமன்றத்தால் வழங்க முடியாது என்றும் கருத்து தெரிவித்துள்ளது.
- அத்தகைய உத்தரவுகளை அரசியலமைப்பிற்கு விரோதமானது என்றும் உச்ச

நீதிமன்றம் கூறியது.

- 200 மற்றும் 201 ஆகிய சரத்துகளின் கீழ் நீதிமன்றங்கள் காலக்கெடுவுக்கு உட்பட்டு நடவடிக்கையை மேற்கொள்ள கட்டாயப்படுத்த முடியுமா என்பது குறித்து தெளிவு படுத்தக் கோரிய குடியரசுத் தலைவரின் குறிப்பில் நீதிமன்றம் தனது ஒரு மனதான கருத்தை வெளியிட்டது.
- இது தலைமை நீதிபதி B.R. கவாய் மற்றும் நீதிபதிகள் சூர்யா காந்த், விக்ரம் நாத், P.S. நரசிம்மா மற்றும் A.S. சந்துர்கர் ஆகியோர் அடங்கிய அரசியலமைப்பு அமர்வாகும்.
- இது தமிழ்நாடு வழக்கில் இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வு பிறப்பித்த முந்தைய உத்தரவுகள் மீதானதாகும்.
- இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வு ஆனது, மசோதாக்கள் குறித்து முடிவெடுக்கும் சூழலில் ஆளுநர்களுக்கான காலக்கெடுவை நிர்ணயித்திருந்தது.
- 10 தமிழ்நாடு மசோதாக்களுக்கு ஒப்புதலாகக் கருதப்படும் உத்தரவினை வழங்க இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வு 142வது சரத்தினைப் பயன்படுத்துவது அதன் அதிகாரத்திற்கு அப்பாற்பட்டது என்றும் உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டது.

## புவி அமைப்பு அறிவியல் சபை




- புவி அறிவியல் அமைச்சகம் ஆனது, பின்வரும் ஐந்து நிறுவனங்களை ஒன்றிணைப்பதற்காக புவி அமைப்பு அறிவியல் சபையை உருவாக்கியுள்ளது:
  - இந்திய வெப்பமண்டல வானிலை ஆய்வு நிறுவனம் (IITM - புனே)
  - தேசியப் புவி அறிவியல் ஆய்வு மையம் (NCESS - திருவனந்தபுரம்)
  - தேசியப் பெருங்கடல் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (NIOT - சென்னை)
  - துருவ மற்றும் பெருங்கடல் ஆராய்ச்சிக்கான தேசிய மையம் (NCPOR - கோவா) மற்றும்
  - இந்தியத் தேசியப் பெருங்கடல் தகவல் சேவை மையம் (INCOIS – ஐதராபாத்).
- முதல் பொதுக்குழு கூட்டம் ஆனது, இந்த நிறுவனங்கள் அனைத்தும் ஒரே நிர்வாக அமைப்பில் எவ்வாறு இணைந்து செயல்படும் என்பதை மதிப்பாய்வு செய்தது.
- இந்த இணைப்பானது புவி அறிவியல் நிறுவனங்களில் செயல்திறனை மேம்படுத்தச் செய்வதையும் நிர்வாகக் குறுக்கீடுகளை குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டு உள்ளது.

- புதிய சபையின் ஒருங்கிணைந்த விதிகளைப் பின்பற்றும் நிலையில் ஒவ்வொரு நிறுவனமும் அதன் அடையாளத்தைத் தக்க வைத்துக் கொள்ளும்.
- அனைத்து நிறுவனங்களுக்கும் ஒரு ஒருங்கிணைந்த வருடாந்திர அறிக்கையை வெளியிடுவதற்கான திட்டம் குறித்து சபை ஆய்வு செய்து வருகிறது.

### வனசக்தி தீர்ப்பின் மறுமதிப்பாய்வு

- உச்ச நீதிமன்ற அமர்வானது 2025 ஆம் ஆண்டு மே மாதத்தில் வழங்கிய, திட்ட நிறைவிற்குப் பிந்தைய சுற்றுச்சூழல் அனுமதிகளை (EC) நிறுத்திய அதன் வனசக்தி உத்தரவை மாற்றியுள்ளது.
- சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986 மற்றும் 1994/2006 EIA (சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு) அறிவிப்புகள் ஆனது, பணிகளைத் தொடங்குவதற்கு முன் திட்டங்களுக்கு EC பெற வேண்டும் என்று கோருகின்றன.
- காமன் காஸ் (2017) மற்றும் அலெம்பிக் பார்மாசூட்டிகல்ஸ் (2020) போன்ற முந்தைய வழக்குகளில், முன் கூட்டிய EC கட்டாயமாக இருக்கும் சூழல்களில், திட்ட நிறைவிற்குப் பிந்தைய EC அனுமதிக்கப்படாது என்று கூறப்பட்டது.
- இந்தப் புதிய முடிவு ஆனது, முக்கிய வளங்கள் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டிருக்கும் போது, பொதுவாக அபராதங்களுடன், திட்ட நிறைவிற்குப் பிந்தைய EC பெறுவதற்கான ஒரு சிறிய வாய்ப்பினை அனுமதிக்கிறது.
- சுற்றுச்சூழல் அமைச்சகம் ஆனது "EC பெறுவது முதன்மையானது" என்ற கொள்கையினை முக்கிய விதியாக வைத்திருக்க வேண்டும் என்றும், அரிதான சூழ்நிலைகளில் மட்டுமே திட்ட நிறைவிற்குப் பிந்தைய EC விதியைப் பயன்படுத்த வேண்டும் என்றும் நீதிமன்றம் குறிப்பிட்டது.




## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### சீரொளிக் கற்றையைப் பயன்படுத்தும் புதிய ஆளில்லா விமானப் பாதுகாப்பு அமைப்புகள்

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) உருவாக்கிய 16 ஒருங்கிணைந்த ஆளில்லா விமான கண்டறிதல் மற்றும் தடை அமைப்புகளை (IDDS)

இந்தியா படையில் இணைக்க உள்ளது.

- இந்த அமைப்பு ஆனது, எதிரி நாட்டு ஆளில்லா விமானங்களை 2 கிலோமீட்டர் தூரத்தில் தடுத்து நிறுத்தக் கூடிய 10-கிலோவாட் (kW) திறன் கொண்ட சீரொளிக் கற்றையைப் பயன்படுத்துகிறது.
- இது உயர் ஆற்றல் அமைப்புகள் மற்றும் அறிவியல் மையத்தின் (CHESS) கீழ் DRDO அமைப்பின் நேரடி ஆற்றல் ஆயுதங்கள் (DEW) திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- மார்க்-2 வடிவ அமைப்பானது ஆளில்லா விமானங்களின் உணர்வுக் கருவிகளை முடக்கி அவற்றின் கட்டமைப்பைச் சேதப்படுத்தும்.




## H5N5 மனிதத் தொற்றுப் பாதிப்பு – அமெரிக்கா




- உலகில் முதன்முதலில், மனிதருக்கு H5N5 வகை பறவை காய்ச்சல் ஏற்பட்டிருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

- சோதனைகள் ஆனது முதலில் இன்ஃப்ளுயன்ஸா A H5 பாதிப்பினைக் கண்டறிந்தன என்பதோடு பின்னர் அது H5N5 துணை வகை என உறுதிபடுத்தப்பட்டது.
- H5N5 பாதிப்பானது முன்னதாக பறவைகள் மற்றும் விலங்குகளில் மட்டுமே காணப் பட்டது என்பதோடு மனிதர்களில் அது ஒருபோதும் பதிவாகவில்லை.
- காட்டில் உள்ள நீர்வாழ் பறவைகள் இன்ஃப்ளுயன்ஸா A வைரஸ்களின் இயற்கையான ஓம்புயிரிகளாக உள்ளன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## Mutirão உத்தி





- 2025 ஆம் ஆண்டில் நடைபெற்ற COP30 மாநாட்டில் பேச்சு வார்த்தைகளை விரைவு படுத்த பிரேசில் கூட்டு அணிதிரட்டலின் mutirão மாதிரியைப் பயன்படுத்தியது.
- உலக நாடுகள் 2025 ஆம் ஆண்டு நவம்பர் 21 ஆம் தேதிக்குள் முக்கியப் பருவநிலை பேச்சு வார்த்தை கோப்புகளை நிறைவு செய்யுமாறு கோரப்பட்டன.
- முன்னுரிமைத் தலைப்புகளில் ஏற்பு இலக்குகள், தணிப்புப் பணிகள், முறையான பரிமாற்றம் மற்றும் பருவநிலை நிதி ஆகியவை அடங்கும்.
- பெலெம் தொகுப்புக்கான முக்கியப் பணிகளை 2025 ஆம் ஆண்டு நவம்பர் 18 ஆம் தேதியன்று முடிக்க தலைமை வகிப்பு நாடு இலக்கு நிர்ணயித்தது.
- ஐக்கிய நாடுகளின் பருவநிலை செயல்முறையின் ஒரு முக்கியமான கட்டத்தில் முடிவுகளை இறுதி செய்வதற்கான கூட்டுப் பொறுப்பை பிரேசில் வலியுறுத்தியது.
- பாரிஸ் உடன்படிக்கைக்கு பத்து ஆண்டுகளுக்குப் பிறகு COP30 நடைபெறுவதால் அது செயல்பாடு சாராத முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது.

## UNEP உலகளாவிய மீத்தேன் அறிக்கை 2025

- COP30 மாநாட்டின் போது UN சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு 2025 ஆண்டு உலகளாவிய மீத்தேன் நிலை அறிக்கையை வெளியிட்டது.
- 2020 ஆம் ஆண்டில் உலகளாவிய மீத்தேன் உமிழ்வு சுமார் 352 மில்லியன் டன்களாக இருந்ததாக அறிக்கை கூறுகிறது.
- தற்போதைய நிலைமைகளின் கீழ் 2030 ஆம் ஆண்டில் உமிழ்வு சுமார் 369 மில்லியன்

டன்களாக உயரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

- உலகளாவிய மீத்தேன் உமிழ்வில் வேளாண்மை சுமார் 42% பங்களிக்கிறது.
- தற்போதைய தேசிய உறுதிப்பாடுகள் 2030 ஆம் ஆண்டிற்குள் 2020 ஆம் ஆண்டில் இருந்த அளவை விட 8 சதவீதம் உமிழ்வைக் குறைக்கலாம்.
- தற்போது கிடைக்கக் கூடிய அனைத்து உமிழ்வுக் குறைப்பு வாய்ப்புகளையும் செயல் படுத்துவதன் மூலம், உலகளாவிய மீத்தேன் உறுதிப்பாடு இலக்கிற்கு ஏற்ப, 2030 ஆம் ஆண்டிற்குள் உமிழ்வை சுமார் 32 சதவீதம் குறைக்கலாம்.




## பருவநிலை ஒப்பந்தத்தில் கம்போடியா




- பிரேசிலின் பெலெமில் நடைபெற்ற ஐ.நா. பருவநிலை மாநாட்டின் COP30 மாநாட்டில் புதைபடிவ எரிபொருள் பரவல் தடை ஒப்பந்த முன்னெடுப்பிற்கு கம்போடியா தனது ஆதரவை அறிவித்தது.

- கம்போடியா இதில் இணைந்ததன் மூலம், இந்த ஒப்பந்தத்தை ஆதரிக்கும் மொத்த நாடுகளின் எண்ணிக்கை 18 ஆக அதிகரித்தது.
- நிலக்கரி, எண்ணெய் மற்றும் எரிவாயுவின் பயன்பாட்டினை படிப்படியாக அகற்றச் செய்வதற்கான ஒரு உலகளாவியச் சட்டத் திட்டத்தை உருவாக்கச் செய்வதே இந்த முன்னெடுப்பின் நோக்கமாகும்.
- இந்த முன்னெடுப்பில் இலங்கை மற்றும் நேபாளம் உட்பட மேலும் பத்து நாடுகள் தற்போது முறைசாரா பார்வையாளர் நாடுகளாக உள்ளன.

## புதிய பருவநிலை நிர்வாகத் தளம் - TRST01





- TRST01 ஆனது பிரேசிலில் நடைபெற்ற COP30 மாநாட்டில் பாரிசு உடன்படிக்கைக்கான ஒருங்கிணைந்தத் தளத்தை (PAIP) அறிமுகப்படுத்தியுள்ளது.
- உமிழ்வுத் தரவைக் கண்காணிக்கவும் சரி பார்க்கவும் வேண்டி PAIP ஆனது, செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் தொடர் சங்கிலித் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துகிறது.
- இது விவரப் பட்டியல், சரி பார்ப்பு மற்றும் சுழற்சியில் இருந்து கார்பன் வரவினை நீக்குதல் போன்ற உமிழ்வுப் பணிகளின் அனைத்து நிலைகளையும் இணைக்கிறது.
- அதன் புதிய சுற்றுச்சூழல் வள இருப்பில் இந்த தளத்தைப் பயன்படுத்திய முதல் நாடு மலாவி ஆகும்.
- இந்த அமைப்பில் செயற்கை நுண்ணறிவு கருவிகள், திறன் மிகு ஒப்பந்தங்கள், செயற்கைக் கோள் பகுப்பாய்வு மற்றும் இயந்திரக் கற்றல் ஆகியவை அடங்கும்.
- PAIP ஆனது வெளிப்படைத்தன்மை மற்றும் அறிக்கையிடலை மேம்படுத்துவதன் மூலம் பாரிசு உடன்படிக்கையின் கீழ் 6வது பிரிவின் செயல்படுத்தலை ஆதரிக்கிறது.

## IFCCT மன்றம்

- பருவநிலை மாற்றம் மற்றும் வர்த்தகம் குறித்த ஒருங்கிணைந்த மன்றம் (IFCCT) ஆனது பிரேசிலின் பெலெமில் நடைபெற்ற COP30 மாநாட்டில் தொடங்கப்பட்டது.
- IFCCT என்பது எந்தவொரு முறையான பேச்சுவார்த்தைகளும் இல்லாமல் பருவநிலைக் கொள்கைகள் மற்றும் சர்வதேச வர்த்தகத்தைப் பற்றி விவாதிக்கும் உலகளாவியத் தளமாகும்.
- கார்பன் எல்லைச் சீரமைப்பு நடவடிக்கைகள் (CBAM), பசுமை மானியங்கள் மற்றும் விநியோகச் சங்கிலி மாற்றங்கள் போன்ற பிரச்சினைகளை உலக நாடுகள் தீர்க்க

உதவுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ IFCCT நாடுகள் பருவநிலை தொடர்பான வர்த்தக நடவடிக்கைகளைப் புரிந்து கொண்டு நிர்வகிக்க உதவுகிறது.




## அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### பருவநிலை மாற்றச் செயல்திறன் குறியீடு 2026




❖ பிரேசிலில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் (UN) COP30 உச்சி மாநாட்டில் 2026 ஆம் ஆண்டு பருவநிலை மாற்றச் செயல்திறன் குறியீடு (CCPI) வெளியிடப்பட்டது.

- டென்மார்க் 80.52 புள்ளிகளுடன் 4வது இடத்தில் முன்னணி இடத்தினைப் பெற்ற அதே நேரத்தில் முதல் மூன்று இடங்களில் எந்த நாடும் இடம் பெறவில்லை.
- சவுதி அரேபியா 11.9 புள்ளிகளுடன் கடைசி இடங்களில் 67வது இடத்தில் உள்ளது.
- இந்தியா 61.31 மதிப்பெண்களுடன் 10வது இடத்திலிருந்து 13 இடங்கள் சரிந்து 23வது இடத்தினைப் பெற்றது.
- பசுமை இல்ல வாயு (GHG) உமிழ்வு, பருவநிலைக் கொள்கை மற்றும் எரிசக்திப் பயன்பாடு ஆகியவற்றில் இந்தியா "நடுத்தரப் பிரிவு" நாடாக மதிப்பிடப்பட்டது.
- ஜெர்மன்வாட்ச், நியூக்ளைமேட் நிறுவனம் மற்றும் பருவநிலை நடவடிக்கை வலையமைப்பின் அறிக்கையின்படி புதுப்பிக்கத்தக்க எரிசக்தி செயல்திறனில் இந்தியா "குறைந்த" மதிப்பெண் பெற்றது.

# மாநிலச் செய்திகள்

## GIG தொழிலாளர்கள் வரைவு மசோதா

- தெலுங்கானா அமைச்சரவையானது, 2025 ஆம் ஆண்டு இணைய வழி மூலம் திரட்டப் பட்ட தொழிலாளர்கள் மற்றும் இணைய தள (GIG) தொழிலாளர்கள் வரைவு மசோதாவிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- தொழிலாளர் நலனை மேற்பார்வையிடவும் வெளிப்படையான கட்டணங்களை உறுதி செய்யவும் இது ஒரு சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தை உருவாக்குகிறது.
- இணைய தளங்கள் 60 நாட்களுக்குள் தொழிலாளர் தரவைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதோடு தொழிலாளர்கள் மாநிலத் திட்டங்களை அணுக வேண்டி இதில் சுயமாகவும் பதிவு செய்யலாம்.
- அரசாங்கப் பங்களிப்புகள், பெருநிறுவனச் சமூகப் பொறுப்பு (CSR) நிதிகள் மற்றும் சேவைத் தொகுப்பு நிறுவனங்கள் கட்டணங்களைப் பயன்படுத்தி ஒரு நல நிதி உருவாக்கப் படும்.
- விதிகளை மீறும் தளங்களுக்கான குறை தீர்க்கும் அமைப்புகள் மற்றும் அபராதங்களையும் இந்தச் சட்டம் வழங்குகிறது.




## 2025 ஆம் ஆண்டு இருவாட்சித் திருவிழாவிற்கான பங்குதாரர் நாடு

- நாகாலாந்தில் நடைபெறும் 2025 ஆம் ஆண்டு இருவாட்சித் திருவிழாவிற்கான பங்கு தாரர் நாடாக ஐக்கியப் பேரரசு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

- இந்த விழாவானது, டிசம்பர் 01 முதல் 10 ஆம் தேதி வரை கோஹிமாவில் உள்ள கிசாமா பாரம்பரிய கிராமத்தில் நடைபெறும்.
- இது பாரம்பரிய மற்றும் சமகால கலாச்சார நிகழ்வுகளின் முனைப்பு மிக்க கலவையின் மூலம் நாகாலாந்தின் வளமான பழங்குடி பாரம்பரியத்தைக் கொண்டாடுகிறது மற்றும் பாதுகாக்கிறது.
- இந்தத் திருவிழாவானது "திருவிழாக்களின் திருவிழா" என்றும் அழைக்கப்படுகிறது.




## முக்கிய தினங்கள்

### சாலைப் போக்குவரத்து மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான உலக நினைவு தினம் 2025 - நவம்பர் 16

- சாலை விபத்துகளில் கொல்லப்பட்ட அல்லது படுகாயமடைந்தவர்களை நினைவு கூர்ந்து, அவசர சேவைகளின் பணிகளை கௌரவிப்பதே இந்த நாளின் நோக்கமாகும்.
- 2030 ஆம் ஆண்டிற்குள் சாலை விபத்து மூலமான உயிரிழப்புகள் மற்றும் காயங்களை 50% குறைக்க ஐ.நா. சபை 2021–2030 ஆம் ஆண்டுகளை சாலைப் பாதுகாப்புக்கான நடவடிக்கைக்கான தசாப்தமாக அறிவித்தது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Remember. Support. Act" என்பதாகும்.





### சர்வதேச சகிப்புத் தன்மை தினம் 2025 - நவம்பர் 16

- 1995 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அமைப்பினால் சகிப்புத்தன்மை குறித்த கொள்கைகளின் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டதை இந்த நாள் குறிக்கிறது.

- மக்களிடையே மரியாதை, புரிதல் மற்றும் அமைதியான சகவாழ்வை மேம்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சகிப்புத் தன்மை மற்றும் அகிம்சையை ஊக்குவிக்கும் முயற்சிகளை கௌரவிப்பதற்காக யுனெஸ்கோ, மதன்ஜீத் சிங் பரிசையும் வழங்குகிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Promoting Respect and Understanding Worldwide" என்பதாகும்.




## உலக கர்ப்பப்பை வாய் புற்றுநோய் ஒழிப்பு தினம் 2025 – 17 நவம்பர் 2025





- முதல் உலக கர்ப்பப்பை வாய் புற்றுநோய் ஒழிப்பு தினம் ஆனது 2025 ஆம் ஆண்டில் அனுசரிக்கப் பட்டது.
- கர்ப்பப்பை வாய் புற்றுநோயை ஒழிப்பதற்கான உலகளாவிய நடவடிக்கையை ஊக்குவிப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நாள் எழுபத்தெட்டாவது உலக சுகாதார சபையால் (WHA78.8) அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

- இது கர்ப்பப்பை வாய் புற்றுநோயை முடிவுக்குக் கொண்டு வர 194 நாடுகளின் 2020 ஆம் ஆண்டு உறுதிமொழியை அடிப்படையாகக் கொண்டது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Act Now: Eliminate Cervical Cancer" என்பதாகும்.
- உலகளாவிய இலக்குகள் ஆனது 2030 ஆம் ஆண்டிற்குள் 90% தடுப்பூசி, 70% பரிசோதனை மற்றும் 90% சிகிச்சையை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

# இதரச் செய்திகள்

## 2025 ஆம் ஆண்டின் சிறந்த சொல் - Parasocial




- கேம்பிரிட்ஜ் அகராதியானது 2025 ஆம் ஆண்டிற்கான அதன் சிறந்த சொல்லாக "Parasocial" என்பதைத் தேர்ந்தெடுத்தது.
- "Parasocial" என்பது ஒரு பொது நபர் அல்லது செயற்கை நுண்ணறிவு (AI) அமைப்புடன் ஒருவர் உணரும் ஒருதலைப்பட்ச உணர்ச்சிப் பிணைப்பைக் குறிக்கிறது.
- இந்த சொல் முதன்முதலில் 1956 ஆம் ஆண்டில் டொனால்ட் ஹார்டன் மற்றும் ரிச்சர்ட் வோல் ஆகியோரால் உருவாக்கப்பட்டது.
- இந்தச் சொல் ஆனது இயங்கலை நடத்தை மற்றும் டிஜிட்டல் உறவுகளில் வளர்ந்து வரும் ஆர்வத்தைப் பிரதிபலிக்கிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★